மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், ஸ்ரீவைகுண்டம்.
முன்னிலை: திரு. M. ஹரிராமகிருஷ்ணன், M.A., M.Phil., L.L.M.,
மாவட்ட உரிமையியல் நீதிபதி, ஸ்ரீவைகுண்டம்.
2025– ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 18–ஆம் நாள் திங்கட்கிழமை
இடைக்கால மனுஎண்.33/2025 ல் அசல் வழக்கு எண்.6/2019

**CNR.No. TNTT-08-000025-2019**

1.முகம்மது சாகுல் ஹமீது
2. முகமது நவாஸ் அப்துல் காதர் ... மனுதாரர்கள்/பிரதிவாதிகள்

/எதிர்/

முகம்மது யாக்கூப்பு ... எதிர்மனுதாரர்/வாதி

இம்மனுவானது இறுதி விசாரணைக்காக வந்தபோது மனுதாரர்கள் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.D.வெங்கடாசலபதி அவர்கள் முன்னிலையாகியும், எதிர்மனுதாரர் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.M.ராகவன் அவர்கள் முன்னிலையாகியும், மனுதாரர் மற்றும் எதிர்மனுதாரர்கள் தரப்பில் வழக்கறிஞர்கள் செய்து கொண்ட வாத உரைகளை கேட்டறிந்தும், மனு சம்பந்தப்பட்ட சகல ஆவணங்களை பரிசீலித்தும், இதுநாள் வரையில் இந்நீதிமன்றத்தின் பரிசீலனையில் இருந்து வந்த இம்மனுவில் இன்று (18.08.2025) இந்நீதிமன்றம் ஆய்ந்து வழங்கும் ...

**உத்தரவு**

வா.சா.ஆ.1 மற்றும் வா.சா.ஆ.13 ஆவணங்களில் காதர் முகைதீனின் கைரேகைகளையும், வா.சா.ஆ.1ல் சாட்சிகளான 2ம் மனுதாரர் கையொப்பத்தையும், முகம்மது முஸ்ஸமில் கையொப்பத்தையும் ஒப்பீட்டு பார்த்து கையெழுத்து மற்றும் கைரேகை நிபுணர் அறிக்கை தாக்கல் செய்ய ஆணையர் நியமனம் வேண்டி உரிமையியல் நடைமுறைச்சட்டம் கட்டளை 26 விதி 10A ன் கீழ் இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**2.மனுதாரர்கள் தரப்பு மனுவின் சுருக்கம்:**

அ) 1ம் மனுதாரர் 2ம் மனுதாரரின் சகோதரர் ஆவார். எதிர்மனுதாரர்/வாதி, மனுதாரர்கள்/பிரதிவாதிகளுக்கு எதிராக தாவா வீட்டிலிருந்து மனுதாரர்களை வெளியேற்றி தாவா வீட்டை எதிர்மனுதாரரிடம் ஒப்படைக்க கேட்டு அசல் வழக்கு தாக்கல் செய்துள்ளார். தாவா சொத்தினை 1ம் மனுதாரரின் தந்தை காதர் முகைதீன் எதிர்மனுதாரருக்கு 27.05.1993ல் கிரைய பத்திரம் எழுதிக்



HARIRAMAKRISHNAN Digitally signed by HARIRAMAKRISHNAN
Date: 2025.08.18 15:40:17 +0530

கொடுத்துள்ளதாக கூறியுள்ளார். 27.05.1993 ல் எழுதிக் கொடுத்ததாக சொல்லப்படும் கிரைய பத்திரத்தில் மனுதாரரின் தந்தை காதர் முகைதீன் கையொப்பமும், கைரேகையும் செய்யவில்லை. கிரைய பத்திரத்தில் 1ம் மனுதாரரும் அவரது சகோதரர் முகம்மது முஸ்ஸமிலும் சாட்சிகளாக கையொப்பம் போடவில்லை.

ஆ) 27.05.1993 ல் கேரளா மாநிலம் திருவனந்தபுரம் மாவட்டம், நெய்யாற்றங்கரை வட்டம், பாறசாலை சார்பதிவு அலுவலகத்தில் எதிர்மனுதாரர் ஆள்மாறாட்டம் செய்து மோசடியாகவும், போலியாகவும் கையொப்பங்களையும், கைரேகைகளையும் உற்பத்தி செய்து போலி கிரைய பத்திரத்தினை பதிவு செய்துள்ளார். மேற்படி போலி கிரைய ஆவணம் வா.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது. அதனை எதிர்த்து மனுதாரர்கள் 27.05.1993 ல் தாவா சொத்து குறித்து எழுதப்பட்டதாக சொல்லப்படும் கிரைய பத்திரம் செல்லாது மற்றும் இல்லாநிலையது விளம்புகைப் பரிகாரம் கோரி எதிர்வழக்குரை தாக்கல் செய்துள்ளனர்.

இ) 1ம் மனுதாரரின் தந்தை காதர்முகைதீன் 06.03.1990 ல் செய்துங்கநல்லூர் கிராமத்தில் உள்ள வேறு சொத்துக்கள் பொறுத்து முறப்பநாடு சார்பதிவாளர் அலுவலகத்தில் கிரைய ஆவணம் பதிவு செய்து கொடுத்துள்ளார். மேற்படி கிரைய ஆவணம் வாதி தரப்பில் வா.சா.ஆ.13 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது. வா.சா.ஆ.1 கிரைய பத்திரத்தில் 1ம் மனுதாரரின் தந்தையின் கையெழுத்து கைரேகை இல்லை என்றும் அதனை அவர் போடவில்லை என்றும் நிரூபிக்க வேண்டியுள்ளதால் வா.சா.ஆ.13 கிரைய ஆவணமும், வா.சா.ஆ.1 கிரைய பத்திரத்தில் குறிப்பிட்டுள்ள 1ம் மனுதாரர் மற்றும் அவரது சகோதரர் கையெழுத்தையும் ஒப்பிட்டு பார்த்து நிரூபிக்க வேண்டியுள்ளது.

ஈ) வா.சா.ஆ.13 ல் உள்ள மனுதாரரின் தந்தையின் கையெழுத்தையும் நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ள வக்காலத்து, எதிர்வழக்குரை, நிரூபண வாக்குமூலம் மற்றும் வேறு ஆவணங்களில் உள்ள 1ம் மனுதாரரின் கையெழுத்தையும், முகம்மது முஸ்ஸமில் கையெழுத்தையும் ஒப்பிட்டு பார்த்து அறிக்கை தாக்கல் செய்வதற்கு கையெழுத்து நிபுணருக்கு அனுப்ப வேண்டி இடைநிலை மனு எண்.1/2020 தாக்கல் செய்யப்பட்டு 14.02.2020 ல் அனுமதிக்கப்பட்டுள்ளது. வா.சா.ஆ.1,



HARIRAMAKRISHNAN Digitally signed by HARIRAMAKRISHNAN
Date: 2025.08.18 15:40:22 +0530

வா.சா.ஆ.13 ல் உள்ள காதர் முகைதீன் கையெழுத்தை மட்டும் ஒப்பீட்டு பார்த்து கையெழுத்து நிபுணர் அறிக்கை தாக்கல் செய்துள்ளார். மேற்படி விபரம் கையெழுத்து நிபணர் தரப்பு சாட்சியை விசாரிக்கும் போது தான் தெரிய வந்தது.

உ) வா.சா.ஆ.1 மற்றும் 13 ஆவணங்களில் காதர் முகைதீன் கைரேகையையும், வா.சா.ஆ.1ல் சாட்சிகளான 1ம் மனுதாரரின் கையெழுத்தையும், முகம்மது முஸ்ஸமில் கையெழுத்தையும் ஒப்பிட்டு பார்க்க வேண்டிய சூழ்நிலை இருந்து வருவதால் அதனையும் ஒப்பீட்டு பார்க்க கையெழுத்து மற்றும் கைரேகை நிபுணர் அவர்களுக்கு அனுப்பி அறிக்கை பெற உத்தரவு பிறப்பிக்க வேண்டி இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**3. எதிர்மனுதாரர் தரப்பு எதிருரை சுருக்கம்:**

அ) வா.சா.ஆ.1ல் உள்ள காதர் முகைதீன் கையெழுத்தையும் ஒப்புகொள்ளப்பட்ட ஆவணமான வா.சா.ஆ.13 ல் உள்ள காதர் முகைதீன் கையெழுத்தையும் ஒப்பிட்டு பார்த்தும், வா.சா.ஆ.1ல் உள்ள சாட்சி கையொப்பம் செய்துள்ள மனுதாரர் மற்றும் அவரது சகோதரர் முகமது முஸ்ஸமில் கையெழுத்தை மனுதாரர்கள் தாக்கல் செய்துள்ள வக்காலத்து, எதிர்வழக்குரை நிரூபண வாக்குமூலத்தில் உள்ள கையெழுத்து மற்றும் வேறு ஆவணங்களில் உள்ள கையெழுத்துக்களுடன் ஒப்பிட்டு பார்த்தும் அறிக்கை தாக்கல் செய்யக் கோரி மனுதாரர்கள் தரப்பில் தாக்கல் செய்திருந்த இடைநிலை மனு எண்.1/2020 கடந்த 14.02.2020ல் பகுதியாக அனுமதிக்கப்பட்டு வா.சா.ஆ.1ல் உள்ள காதர் முகைதீன் கையெழுத்து, காதர் முகைதீனின் ஒப்புக் கொள்ளப்பட்ட கையெழுத்து அடங்கிய வா.சா.ஆ.13 ல் உள்ள கையெழுத்துடன் நீதிமன்ற ஆணையர் மூலம் மதுரை தடய அறிவியல் ஆய்வகத்திற்கு அனுப்பப்பட்டு அதன் அறிக்கை நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டுள்ளது. மேற்படி அறிக்கையில் ஒப்புக் கொள்ளப்பட்ட ஆவணமான வா.சா.ஆ.13 ல் கையெழுத்து செய்த நபர்தான் வா.சா.ஆ.1ல் கையெழுத்து செய்துள்ளார் என்று தெளிவாக குறிப்பிடப்பட்டு நீ.ம.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது.

ஆ)அசல் வழக்கானது இருதரப்பு சாட்சியம் முடிவுற்று, வாதவுரைக்காக வாய்தா போடப்பட்டுள்ள நிலையில் வழக்கை காலதாமதம் படுத்த வேண்டும் என்ற கெட்ட

HARIRAMAKRISHNAN
Digitally signed by HARIRAMAKRISHNAN
Date: 2025.08.18 15:40:26 +0530

எண்ணத்தில் மனுதாரர்கள்/பிரதிவாதிகள் இம்மனுவினை தாக்கல் செய்துள்ளனர். இடைநிலை மனு எண்.1/2020ல் வா.சா.ஆ.1ல் சாட்சிகள் கையெழுத்து சம்பந்தமாக தீர ஆராய்ந்து உத்தரவு பிறப்பிக்கப்பட்டது. மீண்டும் வழக்கை காலதாமதப்படுத்த வேண்டும் என்ற கெட்ட எண்ணத்தில் வா.சா.ஆ.1ல் உள்ள சாட்சியங்களின் கையெழுத்தையும், கையெழுத்து நிபுணருக்கு அனுப்ப மனு தாக்கல் செய்திருப்பது முன் தீர்ப்பு தடையால் பாதிக்கப்பட்டுள்ளது. எதிர்மனுதாரருக்கு காதர் முகைதீனின் கைரேகையையும், வா.சா.ஆ.13ல் உள்ள காதர் முகைதீனின் கைரேகையையும் ஒப்பிட்டு பார்க்க கைரேகை நிபுணருக்கு அனுப்ப எந்தவித ஆட்சேபனையும் இல்லை. எனவே மனுதாரர்களின் மனுவை தள்ளுபடி செய்ய வேண்டும் என்று எதிருரை தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**4.தீர்வு காணப்பட வேண்டிய பிரச்சனை**

வா.சா.ஆ.1 மற்றும் வா.சா.ஆ.13 ஆவணங்களில் காதர் முகைதீனின் கைரேகைகளையும், வா.சா.ஆ.1ல் சாட்சிகளான 2ம் மனுதாரர் கையொப்பத்தையும், முகம்மது முஸ்ஸமில் கையொப்பத்தையும் ஒப்பீட்டு பார்த்து கையெழுத்து மற்றும் கைரேகை நிபுணர் அறிக்கை தாக்கல் செய்ய ஆணையர் நியமனம் வேண்டி உரிமையியல் நடைமுறைச்சட்டம் கட்டளை 26 விதி 10A ன் கீழ் தாக்கல் செய்துள்ள இம்மனுவானது அனுமதிக்கப்பட வேண்டுமா? அல்லது இல்லையா? என்பது தீர்மானிக்கப்பட வேண்டிய பிரச்சனையாகும்.

**தீர்வு**

5. இருதரப்பும் கேட்கப்பட்டது. வழக்கு ஆவணங்கள் பரிசீலனை செய்யப்பட்டன. இம்மனுவின் மனுதாரர்கள் அசல் வழக்கில் பிரதிவாதிகள். எதிர்மனுதாரர் வாதி ஆவார். எதிர்மனுதாரர் வா.சா.ஆ.1ன் கிரையதாரரான மனுதார்களின் தந்தை காதர் முகைதீனின் சகோதரியான பாத்திமாவின் மகன் மற்றும் காதர் முகைதீனின் மகள் அனிசா பீவியை திருமணம் செய்தவர் ஆவார். அதாவது உபயதரப்பினர்கள் ஒருவருக்கொருவர் நெருங்கிய உறவுமுறையினர். எதிர்மனுதாரர் தாவா சொத்தானது வா.சா.ஆ.1 கிரைய ஆவணத்தின் பேரில் பாத்தியப்பட்டதாகவும், அதில் எதிர்மனுதாரரின் மானமனாரான காதர் முகைதீன் வாடகைக்கு குடியிருந்ததாகவும் வழக்குரையில் சங்கதிகள் முன்னிட்டுள்ளார்.



HARIRAMAKRISHNAN Digitally signed by HARIRAMAKRISHNAN Date: 2025.08.18 15:40:30 +0530

6. தாவா வழக்கானது சமூகம் நீதிமன்றம் குறிப்பிடும் காலத்திற்குள் பிரதிவாதிகள் தாவா வீட்டிலிருந்து வெளியேறி தாவா வீட்டினை வாதியிடம் ஒப்படைக்க வேண்டியும், அவ்வாறு செய்ய தவறும் பட்சத்தில் நீதிமன்றம் மூலமாக தாவா வீட்டிலிருந்து பிரதிவாதிகளை வெளியேற்றி தாவா வீட்டினை வாதி வசம் ஒப்படைக்க வேண்டியும் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

7. தாவா வழக்கானது கடந்த 22.01.2019ம் தேதி தாக்கல் செய்யப்பட்டு 6 ஆண்டுகளுக்கு மேலாக நிலுவையில் இருந்து வருகிறது. எதிர்மனுதாரர்/வாதி தரப்பில் வா.சா.1, 2 சாட்சிகள் விசாரிக்கப்பட்டு வா.சா.ஆ.1 முதல் 16 வரையிலான ஆவணங்கள் குறியீடு செய்யப்பட்டுள்ளன. மனுதாரர்கள்/பிரதிவாதிகள் தரப்பில் பி.சா.1 முதல் பி.சா.3 வரையிலான சாட்சிகள் விசாரிக்கப்பட்டு பி.சா.ஆ.1 முதல் 8 வரையிலான ஆவணங்கள் குறியீடு செய்யப்பட்டுள்ளன. தடய அறிவியல் துறை நிபுணர் நீ.ம.சா.1 ஆக விசாரிக்கப்பட்டு சா.சா.ஆ.1 குறியீடு செய்யப்பட்டுள்ளது. வா.சா.ஆ.1 கடந்த 27.05.1993ம் தேதி மனுதாரர்களின் தந்தை எதிர்மனுதாரருக்கு தாவா சொத்தினைப் பொறுத்து எழுதிக் கொடுத்த கிரைய ஆவணம் ஆகும். வா.சா.ஆ.13 மனுதாரர்களின் தந்தை எதிர்மனுதாரருக்கு வேறு ஒரு சொத்தினைப் பொறுத்து எழுதிக் கொடுத்த மனுதாரர்களால் ஒப்புக் கொள்ளப்பட்ட கிரைய ஆவணம் ஆகும்.

8. தாவா வழக்கானது இருதரப்பு சாட்சியங்கள் விசாரணை நிறைவு பெற்று வாதவுரைக்காக வாய்தா ஏற்படுத்தப்பட்டிருந்த நிலையில், 17.06.2025, 21.06.2025, 23.06.2025 தேதிகளில் வாதவுரைக்காக வாய்தா பெற்றிருந்த நிலையில், 03.07.2025ம் தேதி வாத உரைக்காக இறுதியாக வாய்தா போடப்பட்டிருந்த போது, இம்மனுவானது உரிமையியல் நடைமுறைச்சட்டம் கட்டளை 26 விதி 10A ன் கீழ் வா.சா.ஆ.1ன் கிரையதாரரான காதர்முகைதீனின் கைரேகையையும், வா.சா.ஆ.13ல் உள்ள காதர் முகைதீனின் கைரேகையையும், வா.சா.ஆ.1ல் சாட்சிகளாக குறிப்பிட்டுள்ள 2ம் மனுதாரர் மற்றும் அவரது சகோதரர் முகமது முஸம்மில் என்பவரின் கையொப்பங்களையும் ஒப்பிட்டு பார்த்து கைரேகை நிபுணர் மற்றும் கையெழுத்து நிபுணர் அறிக்கை தாக்கல் செய்ய நீதிமன்ற ஆணையர் நியமனம் செய்யக் கோரி தாக்கல் செய்யப்பட்டுள்ளது.



HARIRAMAKRISHNAN
Digitally signed by HARIRAMAKRISHNAN
Date: 2025.08.18 15:40:34 +0530

9. மனுதாரர்கள் முன்னதாக இந்நீதிமன்றத்தில் தாக்கல் செய்திருந்த இடைநிலை மனு எண்.1/2020 ல் வா.சா.ஆ.1 ன் கிரையதாரர் காதர் முகைதீன் மற்றும் கண்ட சாட்சிகளின் கையொப்பத்தை ஒப்பீட்டு பார்த்து அறிக்கை தாக்கல் செய்யக் கோரி தாக்கல் செய்திருந்துள்ளார். மேற்படி இடைநிலை மனுவானது, காதர் முகைதீனின் கையொப்பத்தை ஒப்பீட்டு பார்த்து அறிக்கை தாக்கல் செய்ய கோரியுள்ளதை பொறுத்து மட்டும் அனுமதிக்கப்பட்டும், சாட்சிகளின் கையொப்பத்தினை ஒப்பிட்டு பார்த்து அறிக்கை தாக்கல் செய்ய கோரியிருந்ததை பொறுத்து தள்ளுபடி செய்யப்பட்டும் கடந்த 14.02.2020 ம் தேதி உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

10. இந்நிலையில் இம்மனுவானது, 5 ஆண்டுகள் கழித்து வா.சா.ஆ.1 ன் கிரையதாரர் காதர் முகைதீன் மற்றும் சாட்சிகளின் கைரேகைகளை ஒப்பிட்டு பார்க்கக் கைரேகை நிபுணருக்கு அனுப்பக் கோரி தாக்கல் செய்யப்பட்டுள்ளது. மேற்படி அறிக்கை தொடர்புடைய நிபுணர் நீ.ம.சா.1 ஆக விசாரிக்கப்பட்டு, நீ.ம.சா.ஆ.1 குறியீடு செய்யப்பட்டுள்ளதுடன் நீ.ம.சா.1 இருதரப்பிலும் விசாரிக்கப்பட்டுள்ளார். மேற்படி இடைநிலை மனு எண்.1/2020 ல் கடந்த 21.12.2023 ம் தேதி அறிக்கை தாக்கல் செய்யப்பட்டு மனு முடிக்கப்பட்டுள்ளது.

11. இடைநிலை மனு எண்.1/2020 ல் சாட்சிகளின் கையொப்பத்தை ஒப்பிட்டு பார்க்க கோரியுள்ள பரிகாரமானது, வா.சா.ஆ.1 கிரைய ஆவணம் ஏற்பட்ட 1993 ம் ஆண்டு மற்றும் அதன் சமகாலங்களில் ஏற்பட்ட சாட்சிகளின் ஒப்புக் கொள்ளப்பட்ட கையொப்பங்கள் தாக்கல் செய்யப்படவில்லை என்பதால் தள்ளுபடி செய்யப்பட்டுள்ளது. அதற்கு எதிராக மனுதாரர்கள் எந்த மேல் நடவடிக்கையும் எடுக்கவில்லை. தற்போதும் மனுதாரர்கள் வா.சா.ஆ.1 ல் கண்ட சாட்சிகளின் 1993 ம் ஆண்டு காலகட்டத்தை சார்ந்த ஒப்புக் கொள்ளப்பட்ட கையொப்பங்களை தாக்கல் செய்யவில்லை. அசல் வழக்கானது வாத உரைக்காக வாய்தா ஏற்படுத்தப்பட்ட பிறகு இடைநிலை மனு எண்.1/2020 ல் காதர் முகைதீனின் கையெழுத்தை பொறுத்து மட்டும் கையெழுத்து நிபுணர் அறிக்கை தாக்கல் செய்துள்ள விபரம் கையெழுத்து நிபுணரை விசாரிக்கும் போது தான் தெரிய வந்ததாக சொல்லியுள்ளது ஏற்புடையதல்ல.

HARIRAMAKRISHNAN
Digitally signed by HARIRAMAKRISHNAN
Date: 2025.08.18 15:40:39 +0530

12. ஏனெனில்.14.02.2020ம் தேதி இடைநிலை மனு எண்.1/2020ல் உத்தரவு பிறப்பிக்கப்பட்டுவிட்டது. அதனைப் பொறுத்து 5 ஆண்டுகள் கழித்து தான் தெரிய வந்ததாக தாவா வழக்கில் எதிர்கட்சி செய்து வரும் மனுதாரர்கள் சொல்லியுள்ளது எந்த விதத்திலும் ஏற்புடையது அல்ல. கையெழுத்து நிபுணர் வா.சா.ஆ.1 மற்றும் 13ல் கண்ட ஆவணத்தை எழுதிக் கொடுத்த நபரின் கையெழுத்துக் குறித்து அறிக்கை தாக்கல் செய்து சாட்சியம் அளித்துள்ளார். அதன் சான்றியல் தன்மை குறித்து தீர்ப்புரையில் விவாதிக்கப்படும்.

13. மனுதாரர்கள் கைரேகைகளை ஒப்பிட்டு பார்க்கக் கோரி இடைநிலை மனு எண்.1/2020 தாக்கல் செய்த போதே பரிகாரம் கோரியிருக்கலாம். ஆனால், 5 ஆண்டுகளாக அவ்வாறு எந்தப் பரிகாரமும் கோராமல் நீ.ம.சா.1ன் சாட்சியம் மற்றும் நீ.ம.சா.ஆ.1 குறியீடு செய்யப்பட்ட பிறகு வா.சா.ஆ.1ன் கிரையதாரர் காதர் முகைதீனின் கைரேகைகளை ஒப்பிட்டு பார்க்க கோரியுள்ள பரிகாரமானது அசல் வழக்கினை இழுத்தடித்து காலதாமதப்படுத்த வேண்டும் என்ற நோக்கில் கேட்கப்பட்டுள்ளதாகத் தான் கருத வேண்டியுள்ளது. தாவா வழக்கில் வாத உரை நிகழ்த்த வேண்டியது மட்டுமே மீதமுள்ளது.

14. இம்மனுவினை முன்னரே தாக்கல் செய்ய போதிய வாய்ப்பும் கால அவகாசமும் பெற்றிருந்தும் மனுதாரர்கள் அதனை செய்யவில்லை. மேலும், இடைநிலை மனு எண்.1/2020ல் பிறப்பிக்கப்பட்ட உத்தரவு குறித்து நீ.ம.சா.1 விசாரிக்கப்பட்ட பிறகு தான் தெரிய வந்ததாக கூறி இம்மனு தாக்கல் செய்துள்ளது மனுதாரர்கள் சுத்தமற்ற கரங்களுடன் இம்மனுவினை தாக்கல் செய்துள்ளனர் என்பதையே காண்பிக்கிறது. வா.சா.ஆ.1ல் கண்ட சாட்சிகளின் கையொப்பத்தினை பொறுத்து ஒப்பீடு செய்யக் கோரியுள்ள பரிகாரம் ஏற்கனவே 5 ஆண்டுகளுக்கு முன்பு தள்ளுபடி செய்யப்பட்டுள்ள நிலையில் மீண்டும் அதே பரிகாரத்திற்காக மனு தாக்கல் செய்ய இயலாது.

15. மனுவில் சொல்லியுள்ள காரணங்கள் போதுமானதாகவும், ஏற்புடையதாகவும், திருப்தியளிப்பதாகவும் இல்லை. வா.சா.ஆ.1ன் கிரையதாரரின் கையெழுத்து சம்பந்தமாக நிபுணர் அறிக்கை தாக்கல் செய்து சாட்சியம் அளிக்கும் வரை அமைதியாக இருந்த மனுதாரர்கள் அதன் பின்னிட்டு இம்மனுவினை தாக்கல்



HARIRAMAKRISHNAN
Digitally signed by HARIRAMAKRISHNAN
Date: 2025.08.18 15:40:43 +0530

செய்துள்ளனர். மேலே விவாதித்துள்ள காரணங்களின் அடிப்படையில் இம்மனு செலவுத் தொகையுடன் தள்ளுபடி செய்யத்தக்கது என்று இந்நீதிமன்றம் முடிவு செய்கிறது.

16. முடிவாக,

**இம்மனு செலவுத் தொகையுடன் தள்ளுபடி செய்து உத்தரவிடப்படுகிறது.**

என்னால் சுருக்கெழுத்துத் தட்டச்சருக்கு நேரடியாக சொல்லப்பட்டு, அவரால் கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் படித்துப்பார்த்து பிழைதிருத்தம் செய்யப்பட்டு திறந்த நீதிமன்றத்தில் இன்று 18.08.2025 அன்று உத்தரவு அவையறிய பகரப்பட்டது.

HARIRAMAKRISHNAN Digitally signed by HARIRAMAKRISHNAN Date: 2025.08.18 15:40:48 +0530

மாவட்ட உரிமையியல் நீதிபதி,
ஸ்ரீவைகுண்டம்.

மனுதாரர்கள் தரப்பில் விசாரிக்கப்பட்ட சாட்சிகள் – இல்லை –

மனுதாரர்கள் தரப்பில் குறியீடு செய்யப்பட்ட சான்றாவணங்கள் – இல்லை –

எதிர்மனுதாரர் தரப்பில் விசாரிக்கப்பட்ட சாட்சிகள் –இல்லை–

எதிர்மனுதாரர் தரப்பில் குறியீடு செய்யப்பட்ட சான்றாவணங்கள் – இல்லை –

HARIRAMAKRISHNAN Digitally signed by HARIRAMAKRISHNAN Date: 2025.08.18 15:40:52 +0530

மாவட்ட உரிமையியல் நீதிபதி,
ஸ்ரீவைகுண்டம்.